## பொள்ளாச்சி நகராட்சி

## 27.04.2018ம் அன்று நடைபெற்ற அவசரக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

903 பொள்ளாச்சி நகராட்சியில் பாதாள சாக்கடைத்திட்டம் அமைக்கும் பணி நடைபெறுகிறது. இதில் வீடுகளிலிருந்து கழிவு நீரை வெளியேற்ற கழிவு நீர் குழாய்கள் பதித்தல் (Internal plumbing) பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.626/2015/UGSS நாள்.17.04.2018 இல் மதிப்பீடுகள் தயார் செய்து கருத்துரு சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடித அறிவுரையின் படி நகராட்சியே பாதாள சாக்கடை வீட்டு இணைப்பு வீட்டு உரிமையாளருக்கு (Internal plumbing) கொடுக்கும் வகையில் கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | வீட்டு இணைப்புகளின் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 1. | **மண்டலம் –1** பகுதிகளில் உள்ள வீட்டு இணைப்புகளுக்கு கழிவு நீர் குழாய்கள் பதித்தல் | 4200 | 2.86 |
| 2 | **மண்டலம் –2** பகுதிகளில் உள்ள வீட்டு இணைப்புகளுக்கு கழிவு நீர் குழாய்கள் பதித்தல் | 3900 | 2.65 |
| 3 | **மண்டலம் –3** பகுதிகளில் உள்ள வீட்டு இணைப்புகளுக்கு கழிவு நீர் குழாய்கள் பதித்தல் | 3800 | 2.58 |
| 4 | **மண்டலம் –4** பகுதிகளில் உள்ள வீட்டு இணைப்புகளுக்கு கழிவு நீர் குழாய்கள் பதித்தல் | 4000 | 2.75 |
| 5 | **மண்டலம் –5** பகுதிகளில் உள்ள வீட்டு இணைப்புகளுக்கு கழிவு நீர் குழாய்கள் பதித்தல் | 4100 | 2.78 |

மேற்காணும் பாதாள சாக்கடை வீட்டு இணைப்புகளை பொது மக்களே முன் வந்து செய்யும் போது கால தாமதம் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. ஆனால், பணியை நகராட்சியே செய்யும் போது, பாதாளச்சாக்கடை வீட்டு இணைப்புகள் அனைவருக்கும் விடுபடாமல் விரைவில் ஏற்படுத்த முடியும். அவ்வாறு செய்யும் பட்சத்தில் வீட்டு இணைப்புகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரை முழு அளவில் சேகரித்து சுத்திகரிப்பு செய்யலாம். இதனால் திட்டம் ஆரம்பித்த தினத்திலிருந்து முழு செயல்பாட்டிற்கு கொண்டு வருவது மட்டுமில்லாமல் சுத்திகரிப்பு பணியை முழு அளவில் தாமதம் இல்லாமல் செயல்படுத்த முடியும். மேலும், ஒவ்வொரு இணைப்புக்கும் மாதந்திர கட்டணம் தொகை வசூலிக்கப்படும் போது வருவாய் அதிகரிக்கும். எனவே, தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை வட்டியில்லா கடனாக பெற அரசிற்கு கருத்துரு சமர்ப்பிக்கலாம். வரும் வருவாயைக் கொண்டு பெறப்படும் வட்டியில்லா கடன் தொகையை, நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படா வண்ணம், திரும்ப செலுத்தலாம். எனவே, இதற்கென தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதியும் மற்றும் தொகைக்கு வட்டியில்லா கடன் பெற மன்றத்தின் அனுமதியும் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம். 2.மேற்படி பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகையினை வட்டி இல்லா கடன் மற்றும் நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு அரசிற்கு கருத்துரு சமர்ப்பிக்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

904 பொள்ளாச்சி நகராட்சியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோக திட்டம் 1948 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் 1975, 1995 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இந்நகராட்சியில் 20253 வீட்டு வரி விதிப்புகளும், 4325 வணிக பயன்பாடு வரி விதிப்புகளும், உள்ளன. தற்போது வரை 14791 வீட்டு உபயோக குடிநீர் இணைப்புகளும், 802 வணிக குடிநீர் இணைப்புகளும், உள்ளன. மீதமுள்ள வரிவிதிப்புகள் அனைத்திற்கும் குடிநீர் இணைப்பு வழங்குமாறு 21.03.2018 யில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நேரிடை ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையரின் அறிவுரையின் படி நகராட்சியே குடிநீர் வீட்டு இணைப்புகள், வீட்டு உரிமையாளருக்கு கொடுக்கும் வகையில் கீழ்க்கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | வேலை | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் பணி | **230.00** |

குடிநீர் திட்டம் பயன்பாட்டிற்கு வந்து பல ஆண்டுகள் ஆகியும், குடிநீர் இணைப்புகளை பொதுமக்களே முன் வந்து பெறும் பொழுது காலதாமதம் ஏற்படுகிறது. எனவே அனைவரும் பெறும் வகையில் இப்பணிளை நகராட்சியே செய்யும் போது விரைவில் செய்து முடிக்க முடியும். அனைத்து வரி விதிப்புகளுக்கும் 100% சதவீதம் இணைப்பு கொடுக்கும் போது வருவாய் அதிகரிக்கும். மேற்காண் மதிப்பீட்டுத் தொகையை வட்டியில்லா கடனாக பெற அரசிற்கு கருத்துரு சமர்ப்பிக்கலாம். வரும் வருவாயினைக் கொண்டு பெறப்படும் வட்டியில்லா கடன் தொகையை நகராட்சிக்கு நிதிஇழப்பு (பணியாளர் ஊதியம் மற்றும் மின்சார கட்டணம்) ஏற்படா வண்ணம் திரும்ப செலுத்தலாம். எனவே இதற்கென தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதியும் மற்றும் தொகைக்கு வட்டியில்லா கடன் பெற மன்றத்தின் அனுமதியும் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

**1.**மன்றம் அனுமதி வழங்கலாம். **2.**மேற்படி பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகையினை வட்டியில்லா கடன் பெறவும் மற்றும் நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு அரசிற்கு கருத்துரு சமர்ப்பிக்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.